# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்: 247/மா/2018**
**ஆணை நாள்: 7–12–2018**

திருமதி J. யசோதை,
10, சேஷாத்திரிபுரம்,
சுப்பிரமணியபுரம்,
ஸ்ரீரங்கம், திருச்சி – 620 006. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
திருச்சி மாநகராட்சி,
திருச்சி – 620 001. --- எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி எண்.10 சேஷாத்திரிபுரம், சுப்பிரமணியபுரம் மெயின் ரோடு ஸ்ரீரங்கம் திருச்சி என்ற முகவரியில் வசிக்கும் திருமதி J. யசோதை என்பவரது 03.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு 12.12.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பெற்று 247/2017 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் கோரிக்கை மற்றும் திருச்சி மாநகரா.சி ஆணையரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்த விபரங்கள் பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருமதி J. யசோதை என்பவர் தனது முறையீட்டு கடிதத்தில் தனது கணவர் திரு. D. ஜெயராம் திருச்சி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்தில் பைப்பு கிளீனராக பணிபுரிந்து 31.03.2006ல் பணி ஓய்வு பெற்றவர் என்றும் அவருக்கு திடிரென உடல் நல குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுபதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் 7.5.2016 அன்று இரவு இறந்து விட்டார் என்றும் மேற்படி மருத்துவ சிகிச்சைக்காக ரூ.1,81,267/- செலவிடப்பட்டது என்றும் அதில் 75 சதவீதம் ரூ.1,35,950/- வழங்க கோரியுள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையர், மனுதாரருக்கு அனுப்பிய 16.11.2016 தேதியிட்ட கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஓய்வூதியதாரர் திரு. டி. ஜெயராம் (PPO-2053) என்பவர் 28.4.2016 அன்று அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவ சிகிச்சை மேற்கொண்ட நிலையில் அன்னார் 7.5.2016ல் டிஸ்ஜார்ஜ் செய்யப்பட்டு அன்று இரவே இறந்துவிட்டார் எனவும் மருத்துவ சிகிச்சைக்கு செலவான தொகையினை தனக்கு வழங்கக் விண்ணப்பம் வாயலாக கோரப்பட்டதற்கு ஓழ்வூதியதாரரிடமிருந்து முன்னதாகவோ அல்லது குடும்பத்தினரிடமிருந்தோ மருத்துவ சிகிச்சைக்கான விண்ணப்பம் ஏதும் பெறப்படாத நிலையில் இறப்புக்கு பின் விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் எனவே விதிகளின்படி மருத்துவச் செலவு தொகையினை வழங்க இயலாது என தெரிவித்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறையீட்டு மனு மீது அறிக்கை அனுப்ப இம்முறைமன்ற நடுவத்தின் 14.2.2018 தேதியிட்ட அறிவிப்பாணையின் படி தெரிவிக்கப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.

இந்நேர்வில் இறந்துவிட்ட ஓய்வூதியதாரரின் மனைவி திருமதி J. யசோதை, என்பவர் தனது கணவருக்கு மேற்கொண்ட மருத்துவ சிகிச்சைக்காக செலவிட்ட தொகையில் தகுதியான தொகையினை பெற தகுதி உடையவர் என தெரியவரும் நிலையில் மனுதாரரிடம் முறையான விண்ணப்பத்தினை பெற்று, தகுதியுடைய மருத்துவ செலவினை கணக்கில் கொண்டு தொடர்புடைய விதிமுறைகளின்படி தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ள ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளருக்காக

பெறுநர்

1. திருமதி J. யசோதை,
   10, சேஷாத்திரிபுரம்,
   சுப்பிரமணியபுரம்,
   ஸ்ரீரங்கம், திருச்சி – 620 006.

2. ஆணையர்,
   திருச்சி மாநகராட்சி,
   திருச்சி – 620 001.